2012 ஏப்ரல் 25]

உறுப்பினர்களுக்கும் தெரியும். அதனடிப்படையில் 100 அடி சாலையைக் கடந்து சென்று பொதுமக்கள் பொருட்களை வாங்குகிற சூழ்நிலை இருந்தால், அதனை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயிருந்து கருத்துருவைக் கேட்டு, அதற்குரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

164—

கிரானைட் தொழிற்சாலை

***6423—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசலில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் TAMIN *நிறுவனத்திற்குச் சொந்தமான கிரானைட் கற்கள் உற்பத்தி செய்யும் சுரங்கம் ஏதும் இல்லை. சுரங்கக் குத்தகை பெற்று கற்கள் உற்பத்தி செய்யும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதிய கிரானைட் தொழிற்சாலை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழ் கோட்டையாம், புதுக்கோட்டை*

மாவட்டத்தில் ஏற்கெனவே குடுமியான்மலைக்கு ஒரு வேளாண்மைப் பட்டயக் கல்லூரியும், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டைக்கு ஒரு பாலிடெக்னிக் கல்லூரியும் வழங்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கு மாவட்ட மக்கள் சார்பில் என் நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெற்றிக்கொடி நாட்ட இருக்கின்ற புதுக்கோட்டை மாவட்டம், குறிப்பாக அன்னவாசல் ஒன்றியத்திலே நார்த்தாமலை, குடுமியான்மலை, பரம்பூர், சித்தன்னவாசல், இரும்பாலி, கீழக்குறிச்சி, வெளத்துப்பட்டி, மருதான்தலை, பெருமாநாடு, புல்வயல், மேலூர், தொடையூர், காளாடிப்பட்டி, மன்னவிளாம்பட்டி, ஆரியூர், முக்கினாமலைப்பட்டி என ஓர் ஒன்றியத்திலே 16 ஊராட்சிகளிலே கிரானைட் குவாரிகள் இருக்கின்றன. குறிப்பாக அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் அதிகம் விரும்பக்கூடிய, Vyara, Lady Dream, Rosewood, Ivory Pearl, GP போன்ற கிரானைட் பிளாக்குகள் இப்பகுதியிலிருந்து அதிகமாக வெட்டி எடுக்கப்படுகின்றன. அரசுப் பொதுத் துறை நிறுவனமான TAMIN மூலமாக Granite cutting and polishing unit ஒன்றை அங்கே நிறுவுகின்றபொழுது, அப்பகுதிவாழ் ஏழையெளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலும், வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலும் அரசு பொதுத் துறை நிறுவனத்திற்கு மிக அதிகமாக வருமானம் வரக்கூடிய ஒரு நல்ல சூழலும் இருக்கின்ற காரணத்தினாலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர், தற்பொழுது நேரம் 10—54.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது பட்டா நிலத்தில் இருக்கிற கிரானைட்டாக இருக்குமென்று நினைக்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அரசுக்குச்

2012 ஏப்ரல் 25]

சொந்தமான TAMIN நிறுவனத்திற்கு கிரானைட் குத்தகை பெற்ற, கற்கள் உற்பத்தி செய்யும் சுரங்கம் ஏதும் அங்கே இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற இடத்தை ஆய்வு செய்து, இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

165—

மகளிர் விடுதி

***556—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக மகளிர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் ஆதி திராவிடர் மாணவியர்களுக்குப் புதிய விடுதி தொடங்கிடத் தேவையான இடம், கட்டமைப்பு வசதிகள் மற்றும் மாணவியர்களின் எண்ணிக்கை அடிப்படையில், நிதிநிலைமைக்கேற்ப புதிய மாணவியர் விடுதி தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.